# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.193/2018
Deposition of Witness for Prosecution PW-3
Name :திரு. பிரசாந்த்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 28th day of October- 2021.

முதல் விசாரணை:-

நான் தற்போது மன்னாய்க்கன்பட்டியில் குடியிருக்கிறேன். நான் இன்ஜினியரிங் படித்திருக்கிறேன். இறந்த முருகேசனை தெரியும் அவர் எனக்கு மாமா ஆவார். ஆஜர் எதிரியையும் தெரியும். எதிரி எனது மாமாவின் மனைவி. கடந்த 25-6-2017 அன்று காலையில் முத்தம்பட்டி வி ஏ ஓ அவர்களின் உதவியாளர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை பக்கத்தில் ஒரு இடத்திற்கு வருமாறு அழைத்தார். அதனால் அவர் அழைத்தபடி பக்கத்தில் இருந்த எனது மாமா வீட்டிற்கு போனோம். அப்போது அந்த வீடு திறந்து கிடந்தது. உள்ளே போய் பார்த்த போது என் மாமா முருகேசன் இறந்து கிடந்தார். பின்னர் வி ஏ ஓ மூலம் தகவல் தெரிந்து போலிசார் அங்கு வந்தார்கள். என் மாமாவிற்கும் எதிரிக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். அடிக்கடி நடப்பதால் அதனை நாங்கள் கண்டு கொள்ளவில்லை. 24-6-2017 அன்று மாலை 4 மணியளவில் மேற்படி இருவருக்கும் சண்டை நடந்தது. அது வழக்கமான சண்டை என்பதால் அதனை யாரும் கண்டுகொள்ளவில்லை. நான் என் மாமா வீட்டிற்கு போய் பார்த்த போது எதிரி மற்றும் அவரது மகன், மகள்கள் அங்கு இல்லை. பின்னர் போலிசார் வந்து பார்த்து விட்டு பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை( எதிரி தரப்பில்)

சம்பவம் குறித்து மற்றவர்கள் சொல்லித்தான் தெரியுமா என்றால் ஆமாம். போலிசார் எழுதியதில் கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

மறு விசாரணை.இல்லை.

Sd/- Prasanth

Sd/- Tr.P.Elango,
III ADJ Salem.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, <u>SALEM.</u>

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.193/2018
Deposition of Witness for Prosecution PW-4
Name :திரு. சுப்ரமணி
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 28th day of October- 2021.

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது மன்னாய்க்கன்பட்டியில் குடியிருக்கிறேன். இறந்த முருகேசனை தெரியும். அவர் எனக்கு பங்காளி முறை. எதிரியை தெரியும்.அவர் முருகேசனின் மனைவி. எதிரியும் அவரது கணவரும் தீப்பெட்டி தொழிற்சாலை மன்னாய்க்கன்பட்டி அருகில் குடியிந்தார்கள். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு வி ஏ ஓ மற்றும் அவரது ஆட்கள் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்துவிட்டு சென்றதாக தகவல் தெரிந்து நான் முருகேசன் வீட்டிற்கு போய் பார்த்தேன். அப்போது முருகேசன் இறந்து கிடந்தார். அப்போது எதிரி மற்றும் அவரது மகன், மகள்கள் அங்கு இல்லை . முருகேசனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது. அதனால் எதிரிக்கும் அவருக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். போலிசார் அங்கு வந்தார்கள். என்னையும் விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதால் அவ்வாறே அனுமதிக்கப்பட்டது.)

அ.த.வ.கு.வி.

கடந்த 25-6-2017 ஆய்வாளர் விசாரித்த போது 24-6-2017 அன்றுமாலை 4-00 மணியளவில் இறந்த முருகேசனுக்கும்அவரது மனைவிக்கும் இடையில் சண்டை நடந்ததாகவும் அப்போது மது அருந்த பணம் கேட்டு முருகேசன் அவரது மனைவியை அடித்ததாகவும் வீட்டு சாமான்களை அடித்து சேதப்படுத்தியதாகவும் அதனால்

ஆத்திரத்தில் தனலட்சுமி ஆகிய எதிரி துப்பட்டாவால் கழுத்தை இறுக்கி கொலை செய்து விட்டு தலைமறைவாகி விட்டதாகவும் எனக்கு தெரிய வந்ததாகவும் இது சம்மந்தமாக வி ஏ ஓ புகார் கொடுத்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு எதிரி எனக்கு வேண்டியவர் என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றல் சரியல்ல.

குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)

நான் அரை கி.மீ தூரம் தள்ளி குடியிருக்கிறேன். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் கையெழுத்து கேட்டார்கள் போட்டு கொடுத்தேன். வேறு எதுவும் தெரியாது.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Subramani

Sd/- Tr.P.Elango,
III ADJ Salem.